# இஸ்லாத்தின் பார்வையில் காதலர் தினம்.

[ Tamil – தமிழ் – تاميلي ]

இம்தியாஸ் யூசுப்

2014 - 1435

IslamHouse.com

# عيد الحب في نظر الإسلام

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2014 - 1435

IslamHouse.com

# இஸ்லாத்தின் பார்வையில் காதலர் தினம்.



# M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

இளசுகளின் மனம் மறந்தவிடாது அலைபாயும் ஒரு தினம் என்றால் பெப்ர வரி 14ம் திகதி காதலர் தினம்!
வாலிபர்கள்,வயோதிபர்கள்,தம்பதிகள் என்று பலரும்
பூச் செண்டு, பரிசுப் பொருட்கள் கொடுத்து வாழ்த்து தெரிவிக் கிறார்கள். விஷேடமாக இளம் வாலிபர்கள் தங்களுடைய காதலை புனிதப் படுத்தக் கூடியதாக இத்தினத்தை பூஜிக்கிறார்கள்
தனது பிறந்த நாளை மறந்துவிட்டாலும், காதலர் தினத்தை மறந்தவிட முடியாத நிலையில் இத்தினம் பிரசித்தம் பெற்று விட்டது.

சர்வதேசரீதியாக பலதினங்கள் விஷேட தினங்களாக கொண் டாடப்படுகிறன.

- போதை ஒழிப்புத் தினம்
- சிறுவர், முதியோர் தினம்
- சூழல் பாதுகாப்புத் தினம்
- சேமிப்புத் தினம்

- மகளிர் தினம்
- இளைஞர்கள் தினம்
- அன்னையர் தினம்
- தொழிலாளர் தினம்
- புவித்தினம்
- நீர் தினம்
- குடும்ப பாதுகாப்பு தினம்

இத்தினங்கள் பற்றிய அறிவும் ஆர்வமும் காணக்கிடைப்பது அரிது.

“காதலர் தினம்” மேற்கத்திய உலகில் சீரழிந்து போன கலா சாரத்தின் சிந்தனையால் உருவான தினம்!

இரவு 12 மணிக்கு காதலர்கள் ஒன்று கூடி முத்தமிடுவதும் பூச்செண்டுகளை பறிமாறுவதும் பரிசில்களை கொடுப்பதும் உல்லாசமாக ஊர்சுற்றுவதும் தனித்து நின்று உறவு கொள்வதும் மிகப்பெரிய நாகரீகம்.

நாளொருவன்னம், பொழுதொரு மேனியாக ஆண் பெண் உறவு (காதலர் காதலி உறவு) மாறிக்கொண்டேயிருக்கும்.

“ஒருவனுக்கு ஒருத்தி” என்ற நிலை மாறி “ஒருவருக்கும், ஒருத்திக்கும் பலபேர்” என்று சாதாரணமாகிவிட்டது.
அதனை பிரதிபலித்துக் காட்டுவதுதான் மேற்கத்திய உலகின் காதலர் தினம்!

கற்பு, கன்னித்தன்மை பற்றி அங்கேயாரும் அலட்டிக் கொள்வதில்லை.

பரஸ்பரம் உடம்புகளை பரிமாறிக் கொள்வதில், கண்டவர் உடன் கூடிக் கொள்வதில் அலாதியான திருப்தி அவர் களுக்கு.!
இளம்பெண்களின் உடைகளை உரித்தெடுத்து பவனிவர விடுவதும் அதற்கு புள்ளிகள் போட்டு கிரீடம் சூட்டுவதும் அவர்களுடைய பொழுதுபோக்கு!
அழகு ராணி எனும் பெயரில் பெண்களின் அங்கங்களை அலந்துபார்த்து ரசிப்பதும் ருசிப்பதும் அவரக்களுடைய கௌரவமான வேடிக்கை!
அழகு சாதனங்களை அள்ளி வழங்கி ஆடைகளை குறைத்து காட்டி ரசிப்பதும் மிதமஞ்சிய பொழுது போக்கு.
பெண்ணின் கற்பை மயக்கமருந்தாக உட்கொள்வதற்கான அத்தனை வாய்ப்புக்களையும் வழிகளையும் தாராளமாக ஏற் படுத்தி கொள்கிறார்கள். அதற்காகவே பல தினங்களை பல சந்தர்ப்பங்களை ஏற்டுத்துகிறார்கள்..

அமெரிகாவின் பிரபல காடகி ஒருவர் கூறும் போது "என்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்ட அமெரிக்கா வீ.ஐ.பி. க்களின் பட்டியலை நான் எடுத்து விட்டால் அவர்களுடைய பெரிய மனிதர் இமேஜ் அத்தோடு காலி'' என்றாள்.

அமெரிகாவின் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்த முக்கிய பணியாளியான பெண்ணொருத்தி அமெரிக்காவின் முன் னைய நாள் ஜனாதிபதியுடன் நடாத்திய அந்தரங்கங் களை அள்ளிக் கொட்டினாள். நாகரீகத்தின் நாயகர்களாக காட்டிக் கொள்ளும் பெரிய மனிதர்கள் பல நாயகிகளுடன் ஊடல் கொள்வதும் "சின்ன வீடு" கட்டிக் கொள்வதும் நாளுக்கு நாள் வெளிவரும் செய்தி களாகி விட்டன.கட்டிக் கொண்ட துணைவிகளுக்கு துரோக மிழைப்பதைப்பற்றி கவலை கொள்ள மாட்டார்கள். பொது வாக மூன்று W களை இவர்கள் எப்போதும் நம்புவதில்லை என்ற நியதியை உருவாக்கிவைத்திருக்கிறார்கள்.

1.Weather காலநிலை

2.Work தொழில்

3.Women பெண்.

இவர்களது செயல்களுக்கு பெண்ணை பழிகாடாவாக ஆக்கிவிட்டார்கள்.

மேலை நாட்டுகளில் பிள்ளைகளுக்கு தாய் சொல்லும் அட் வைஸ், மகளே! யாரோடு கூடினாலும் கருத்தடை உறை யை பாவிக்க மறந்திடாதே என்பது தான்.

கற்பை இழந்தாலும் கர்ப்பத்தோடு வராதே என்பது தார்மீக மந்திரம்!

பாடசாலை செல்லும் பிள்ளைகளும் தொழிலுக்கு செல்லும் பெண்களும் தங்களது பைகளில்களில் கருத்தடை மாத்திரை, கருத்தடை உறை வைத்துக் கொள்ள மறந்திடமாட்டார்கள்.

ஒரு பத்திரிகை செய்தி இப்படி கூறுகிறது.‘‘ஆண்டு தோறும் காதலர் தினசமயத்தில் சராசரியாக 20 சதவீதம் ஆணுறை மற்றும் பெண்கள் உபயோகப்படுத்தும் கருத்தடை மாத்தி ரைகளுக்கு கூடுதல் விற்பனை இருப்பதாக 24 மணிநேர ஆணுறை விற்பனை மையமான எஸ் 2 காண்டம் நிறு வனத்தின் இயக்குனர் சிஷிர் மிக்லானி தெரிவித் தார்.(தினக்குலர்.12.02.2010.)

காதலனும் காதலியும் ரோஜாபூக்களை மட்டும் பறிமாறு வதில்லை. அதையும் தாண்டி பறிமாறுதல்களை நடத்து வார்கள். ஆணுறை விற்பனை சூடுபிடிக்கும் பருவ காலமாக காதலர்

தினம பரினாம வளர்ச்சியடைந் துள்ளது.இது தான் யதார்த்தம்.!

திருமணத்திற்கு முன் கன்னித் தன்மை இழத்தல் கர்ப்பம் தரித்தல் கர்ப்பத்தை கலைத்தல் ஏன் குழந்தையை பெற் றெடுத்தல் எல்லாம் சர்வ சாதாரணமான விடயம். பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

அப்பன் பெயர் தெரியாத குழந்தைகளும் அம்மா பாசம் இல்லாத பிள்ளைகளும் நாளுக்கு நாள் உருவாகிக் கொண் டிருக்கிறார்கள். குழந்தைகளை பராமரிக்க தனியான பாது காப்பு மையத்தையும் உருவாக்கி விட்டார்கள்.

இவர்களது ‘‘உல்லாசபுரியை’’ தான் காதலர் தினமாக அறி முகப்படுத்தி இருக்கிறார்கள்.

மீடியாக்களாலும் ஜனரஞ்சக தினமாக அறிமுகப்படுத் தப்படுகிறது.

சீரழிந்துபோன ஒரு சமூகத்தின் நாற்றம் வீசும் கலாசாரத்தின் நாகரீகப் பெயர் காதலர் தினம். நாறிப்போன இந்த அனாச் சாரம் கீழத்தேய நாடுகளில் அரங்கேற்றப்படுகிறது.

நாகரீகத்தை புரிந்து கொண்டவர்களால் நாற்றம் வீசும் அம்சங்களை புரிந்து கொள்ள முடியாமல் போயுள்ளது.

“ ஆண் பெண் நட்பு தூய்மையானது உறவு புனிதமானது அதனை கொச்சைப் படுத்தக் கூடாது” என்று அழகிய வார்த் தைகளில் காதல் பற்றி பேசலாம், கதைக் கலாம், வாதிக் கலாம். ஆனால் நடை முறையில் அது உண்மையல்ல என்று நிரூபிக்கப்பட்டு வருகிறது.

காதலித்து கைவிடப்பட்ட எத்தனையோ அபலை பெண் களை பார்க்கிறோம்.

கற்பை சூரையாடி குதூகலிக்கும் எத்தனையோ கயவர் களையும் காண்கிறோம்.

ஏமாற்றப்பட்டுவிட்டோம் என கதறிஅழும் கன்னியர்களை யும் கண்டிருக்கிறோம்.

மானம் போய்விட்டதே என்று தற்கொலை செய்து கொள் ளும் அப்பாவி பெண் களையும் அன்றாடம் கேள்விப் படுகிறோம்.

மகள் ஓடிப்போய்விட்டாளே என்று உயிரைமாய்த்துக் கொள் ளும் பெற்றோ ரையும் பார்க்கிறோம்.

கருவை கலைக்கச் சென்று மரணித்துபோன பெண்க்ளின் செய்திகளையும் படித்திருக்கிறோம்.

காதலியுடன தனித்திருந்து சல்லாபித்த காட்சிகளை மறை முகமாக புகை படம் எடுத்து வீடி யோ பண்ணி பிளக் மையில்" பண்ணும் காதலன்; அதனை பேஸ்புக்

மற்றும் இன்டர்நெட்டுக்கு விட்டு பணம் பறித்து - சம்பாதிக்கும்-விடயத்தையும் பார்க்கிறோம்.
அண்மைக்காலமாக எமது நாட்டு பாடசாலை மாணவ மாணவிகள் பூங்காக் களிலும் கடற்கரை ஓரங்களிலும் பஸ்வண்டிகளிலும் ரெஸ்டூரண்ட்களிலும் ஒதுங் கியிருந்து பல்லியறை பாடம் கொள்வதை காவல்துறையினர் கண்டு பிடித்து எச்சரிக்கை செய்து அனுப்பிவைத்த செய்திகள் அதிர்வுகளை ஏற்படுத்தியிருப் பதையும் காணுகிறோம்.
இளம் மொட்டுக்கள் மிக நவீன போன்களை பயன்படுத்தி தங்களுடைய உணர்வுகளை காயப்படுத்திக் கொள்கிறார்கள்.

கண்ணா மூச்சு கவிதைகள் எழுதி கனவு சொல்லும் வாழ்கையைகடைபிடிக்க நினைக்ககிறார்கள். நிஜத்தில் நிற்பதை விட நிழலில் சுகம் தேடுகிறார்கள். நொந்துப் போன மன நோயாளிகளாக மாறிவிடுகிறார்கள்.இறுதியில் தங்கள் கல்வி வாழ்வையும் நாசப்படுத்திக் கொள்கிறார்கள். இலக் கில்லாத வாழ்வுக்கு இக்காதல் களம் அமைத்து விட்டது.
அவ்வாறே கூடுவிட்டு கூடு பாய்வது போல் மதம் விட்டு மதம் மாறி காதல் பண்ணுகிறார்கள். பல நிறங்களையுடைய பூக்கள் மாலையாக மாறுவது

போல் காதலும் மதங்களை விட்டும் புனிதப்பட வேண்டும் என வேதாந்தம் பேசு கிறார்கள்.

இதிலுள்ள இன்னுமொரு கொடுமைதான், காதலுக்காக பெற் றோரை தூற்றுவதும் இகழ்வதும் எதிர்த்து நின்று கதைப் பதும் வீட்டை விட்டு வெளியேறுவதும் என்ற அவலங் களாகும்.

நேற்றைக்கு அறிமுகமான காதலன் காலிக்காக பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரை ஒரு சில நிமிடங்களில் ஒதுக்கிவிட்டு ஓடுகிறார்கள்.

கண் விழித்த இரவுகளும்
பசித்திருந்த பொழுதுகளும்
கருவில்-தூக்கி சுமந்த நாட்களும்
உயிர் தப்பி வந்த பிரசவ வேதனையும்
எந்தவொரு வார்த்தைகளாலும் சொல்ல முடியாது.
தாய்காட்டும் அன்பும் தந்தை காட்டும் பாசமும்
உலகில் யாராலும் தர இயலாது.

பெற்றோரின் துக்கம் ஏக்கம் பற்றி கவலைக் கொள்ளாது கண்ணீர் பற்றி அலட்டிக் கொள்ளாது காதலுக்காக பிள்ளை கள் போய்விடுகிறார்கள்.

கோழி தன் குஞ்சுகளை அரவைணைப்பதை விட பிள்ளை களை பெற்றோர் அரவணைக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள மறந்து விடுகிறார்கள்.

காதலில் கிடைக்கும் அன்பும் சுகமும் உணர்ச்சிகளால் கலந்த வை. லீலைகளால் நிறைந்தவை. தாயும்

தந்தையும் காட்டும் அன்பும் பாசமும் இரத்தத்தால் உரைந்தவை. தொப்புள் கொடியால் பிணைந்தவை. தன் காதலனை கைகொள்வதற்கு இடையூறாக இருக்கும் பெற்றோரை 16 வயது நிரம்பிய மகள் கொலை செய்த துக்க கரமான சம்பவம் அண்மையில் எமது நாட்டில் இடம் பெற்றது. இத்திட்டத்தை தமிழ் சினிமாவில் வரும் கொலை காட்சியை மையப்படுத்தி செய்ததாக பொலிஸாரிடம் அவள் வாக்கு மூலம் கொடுத்துள்ளாள். பெற்ற கடனுக்கு மகள் செய்த இறுதி மரியாதை மிகவும் கொடுமையானது.

தேவையான போஷாக்கும் தேவைப்படும் அறிவமுதமும் ஊட்டி அன்பாக பண்பாக பாசமாக வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையர் வாழ்வுக்கு பொருத்தமான துணையை தன் பிள்ளைக்கு தேடி தராமலா போவார்கள்?

சின்ன வயதிலிருந்து அழகு பார்த்து சின்ன சின்ன ஆசை களை பூர்த்தி செய்து பாசத்தை பொழிந்தவர்கள் பெற்றோர் கள். சின்ன வயதில் நெஞ்சில் உதைத்தவர்கள் வளர்ந்த பின் முதுகில் குத்தி விட்டு ஓடுவது எந்த வகையில் நியாயமோ?

காதல் போதை மூன்று மாதத்தில் தெளிந்திடும் போதே வாழ்வின் போக்கு என்னவென்று தெரிய ஆரம்பிக்கும். நிஜத் தை புரிந்து அல்லல்படும் போது ஆறுதல் சொல்ல யாரும் இருக்கமாட்டார்கள்.

காதலாலும் அதன் புனித தினத்தினாலும் உருவான விபரீதங் கள்தான் இவைகள்.

ஆணும் பெண்ணும் தனிமையில் சந்திப்பது, ஊர் சுற்றுவது, உலா வருவது என்பதுதான் காதல் என்றால் அதற்காகத்தான் காதலர் தினம் என்றால் அப்படிப்பட்ட தினத்தை இஸ்லாம் கண்டிக்கிறது.

உலகம்தோன்றிய காலம் முதல் இன்று வரை பெண்ணின் கற்பைப் பற்றித் தான் இச்சமூகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. கற்புக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் ஏதாவது செயற்பாடுகள், அல்லது பேச்சுக்கள் இருந்தால் அது பெண்ணின் வாழ்க்கையே கேள்விக் குறியாக்கிவிடும்.

''திருமணத்திற்கு முன்பு நீ ஒருவனுடன் ஊர் சுத்தியவள் தானே'' என்று கணவன் மனைவியைப் பார்த்து கேட்டாலே போதும் அவளுடைய கற்பு கேள்விக்குறியாகி விடும்; கசங்கி கந்தலாகி போன துணி போன்று வாழ்வு அஸ்தமனமாகி விடும்.

இன்னும் சில காலம் சென்றால் ''உன் கற்பை நிரூபிக்க அத்தாட்சிப்பத்திரத்தை கொண்டு வா" என கணவன் கேட் டாலும் சந்தேகப்படுவதற்கில்லை.

கற்பு என்பது புனிதமானது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது வானது. இருவரும்

கற்பைபாதுகாக்க வேண்டும் என இஸ்லாம் கண்டிப்பாக -உத்தரவிடுகிறது.

‘விசுவாசிகளான ஆண்களுக்கு தங்கள் பார்வைகளை தாழ்த் திக் கொள்ளுமாறும், தங்களது கற்பை பேணிக் கொள்ளு மாறும். நபியே நீர் கூறுவீராக!இதுவே அவர் களுக்கு மிகப் பரிசுத்தமானதாகுமம். நிச்சயமாக அவர்கள் செய்பவற்றை அல்லாலஹ் நன்கறிந்தவன். விசுவாசிகளான பெண்களுக்கும தங்கள் பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுமாறும், தங்களது கற்பை பேணிக் கொள்ளுமாறும். நபியே நீர் கூறுவீராக!(24:30,31)

கற்பை பாதுகாக்கும் வழிகளை இருசாராருக்கும் குர்ஆன் கட்டளையிடுகிறது. அன்னியவர்களை காணும் போது பார்வையை தாழ்த்திக் கொள்வதே கற்புக்கான முதல் பாது காப்பாகும்.

பார்வைகளை அலையவிட்டால் இச்சைகள் எழுந்து விடும் உணர்வுகள் பொங்கிவிடும். அடுத்த விடயங்களோ மோச மாகிவிடும்.

(صحيح مسلم (٤/ ٢٠٤٧

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «كُتِبَ عَلَى ابْنِ آدَمَ نَصِيبُهُ مِنَ الزِّنَا، مُدْرِكٌ ذَلِكَ لَا مَحَالَةَ، فَالْعَيْنَانِ زِنَاهُمَا النَّظَرُ، وَالْأُذُنَانِ زِنَاهُمَا

الِاسْتِمَاعُ، وَاللِّسَانُ زِنَاهُ الْكَلَامُ، وَالْيَدُ زِنَاهَا الْبَطْشُ، وَالرِّجْلُ زِنَاهَا الْخُطَا، وَالْقَلْبُ يَهْوَى وَيَتَمَنَّى، وَيُصَدِّقُ ذَلِكَ الْفَرْجُ وَيُكَذِّبُهُ»

அன்னியப் பெண்ணைபார்ப்பது கண்கள் செய்யும் விபச்சாரம் தீயதை கேட்பது காதுகள் செய்யும் விபச்சாரம் தீயதை பேசுவது நாவு செய்யும் விபச்சாரம் அவளை தொடுவது கைசெய்யும் விபச்சாரம் அவளை நோக்கி நடப்பது கால்கள் செய்யும் விபச்சாரம். உள்ளம் ஏக்கம் கொள்கிறது. மறைவுறுப்பு (விபச்சாரத்தின் மூலம்) அதனை உண்மை படுத்துகிறது அல்லது பொய்படுத்துகிறது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

ஒரு ஆண் அன்னிய பெண்ணை பார்ப்பதும் ஒரு பெண் அன்னிய ஆணை பார்ப்பதும் விபச்சாரமாகும் என்பதை நபியவர்கள் விளக்கப்படுத்துகிறார்கள்.

காதல் என்ற நிலை யில் நடக்கும் அத்தனை சேட்டைகளும் இந்த விபச்சாரத்திற்குள் அடங்கும்.

صحيح البخاري (٧/ ٣٧)

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «إِيَّاكُمْ وَالدُّخُولَ عَلَى النِّسَاءِ» فَقَالَ رَجُلٌ مِنَ الأَنْصَارِ: يَا رَسُولَ اللَّهِ، أَفَرَأَيْتَ الحَمْوَ؟ قَالَ: «الحَمْوُ المَوْتُ»

பெண்கள் இருக்கும் இடத்திற்கு நீங்கள் செல்வதை பற்றி உங்களுக்கு எச்சரிக்கிறேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்பொழுது ஒரு நபித்

தோழர் கணவனின் நெருங்கிய உறவினர் அப்பெண்ணிடம் செல்லலாமா என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் கணவரின் நெருங்கிய உறவினர் (செல்வது)மரணம் என்று கூறினார்கள். அறிவிப் பவர் உக்பத் இப்னு ஹாமிர் (நூல்: புகாரி முஸ்லிம்)
(صحيح البخاري (٧/ ٣٧

عَنِ ابْنِ عَبَّاسٍ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «لاَ يَخْلُوَنَّ رَجُلٌ بِامْرَأَةٍ إِلَّا مَعَ ذِي مَحْرَمٍ

உங்களில் ஒருவர் ஓர் அந்நியப் பெண்ணிடம் அவளுடைய (தந்தை, சகோதரன், மகன்) போன்ற மஹ்ரமான உறவினர் கள் உடன் இருந்தாலே அன்றி தனியே இருக்க வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் (நூல்: புகாரி முஸ்லிம்.)

மஹ்ரமான இந்த உறவு முறைகள் பேணப்படாத காரணத் தினால் தான் சீரழிவுகள் நடந்து வருகிறன. தனிமனித குடும்ப மற்றும் சமூதாயக் கட்டுக்கோப்பை தகர்த் தெறியக் கூடிய அர்த்தமற்ற செயற்பாடுகளை இஸ்லாம் தடைசெய்கிறது.

எச்சந்தர்ப்பத்திலும் அந்நிய ஆணும் அந்நிய பெண்ணும்தனிமையில்சந்திப்பது, பேசுவது, ஊர்சுற்றித் திரிவதைத் தடுக்கிறது.

தூய்மையான கற்பை பாதுகாக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண்ணின் நன்மை கருதியே இஸ்லாம் இந்த தடையுத் தரவை பிறப்பிக்கின்றது.

ஒரு பெண் தனக்கு விருப்பமான ஒரு கணவனையும்,

ஒரு ஆண் தனக்கு விருப்பமான மனைவியையும் தேர்ந்தெடுப் பதை இஸ்லாம் தடுக்கவில்லை.

பிள்ளைகளின் விருப்பப்படிதான் மணம் முடித்து வைக்க வேண்டுமென இஸ்லாம் கட்டளையிடுகிறது.

இதற்காக இவர்கள் வேலிதாண்டிப் போக வேண்டுமென்று இஸ்லாம் கூறவில்லை.

விபரீதம் ஏற்பட முன்பு விளைவைப் பற்றி அறிவுறுத்து கிறது.

அவசரத் தேவைகள்ஏற்பட்டாலும் ஆண் பெண் பேசக்கூடாது எனக் கூறவில்லை. அவ்வாறான சந்தர்ப்பங் களில் கற்புக்கு பங்கம்ஏற்படாதவாறுகண்ணியத்துடன் நடந்துகொள்ளுமாறு கட்டளையிடுகிறது.

இதற்கு உதாரணமாக அல்குர்ஆன் அன்னை மர்யம் (அலை) அவர்களது வரலாற்றையும் மூஸா (அலை) அவர்களது வரலாற்றைசொல்லித்தருவதைப் பார்க்கிறோம்.

فَأَرْسَلْنَا إِلَيْهَا رُوحَنَا فَتَمَثَّلَ لَهَا بَشَرًا سَوِيًّا (١٧) قَالَتْ إِنِّي أَعُوذُ بِالرَّحْمَنِ مِنْكَ إِنْ كُنْتَ تَقِيًّا (١٨)

(மர்யம்) தன் ஜனங்களை விட்டும் ஒதுங்கி ஒரு திரையைப் போட்டு (மறைத்து) கொண்ட சமயத்தில் நம்முடைய தூதரை (ஜிப்ரீலை) அவரிடம் அனுப்பிவைத்தோம். அவர் சரியான மனிதருடைய தோற்றத்தில் காட்சியளித்தார்.
நீர் இறையச்சமுடையவராக இருந்தால் உம்மை விட்டும் அளவற்ற அருளாளனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன் என்று (மர்யம் ஜிப்ரீலை நோக்கி) கூறினார். (19:17,18)
மூஸா நபி மத்யன் வாசிகளான இரு பெண்களுக்கு நீர் இறைத்துக் கொடுத்து உதவி புரிந்தார்.

فَجَاءَتْهُ إِحْدَاهُمَا تَمْشِي عَلَى اسْتِحْيَاءٍ قَالَتْ إِنَّ أَبِي يَدْعُوكَ لِيَجْزِيَكَ أَجْرَ مَا سَقَيْتَ لَنَا

அது சமயம் அவ்விரு பெண்களில் ஒருத்தி மிக்க நாணத்தோடு அவர் முன் வந்து நீர் எங்களுக்கு தண்ணீர் புகட்டி யதற்குரிய கூலியை உமக்கு கொடுக்கும் பொருட்டு என் தந்தை உம்மை அழைக்கிறார் எனக் கூறினாள். (28:23-25)
இந்த உறவையே இஸ்லாம் வரவேற்கிறது.

ஆணின் கற்பில் கலங்கம் வந்தால் எந்த சமூகமும் பெரிதுப் படுத்துவதில்லை. பெண்ணின் கற்பில் சிறு கீறல் விழுந்தால் கூட எல்லா சமூகமும் சீரிப்பாய்ந்து விழும். பெண்ணின் மானமும் ஆணின் கற்பும் ஒரு சேர பாதுகாத்திட வேண்டும் என இஸ்லாம் கூறுகிறது.

இஸ்லாம் ஒருகட்டமைப்பை கொண்ட மார்க்கம். அதற்கென்று கொள்கையும் கோட்பாடும் உண்டு. எந்த இடத்திலும் கொள்கையில் சமரம் செய்து கொள்ளாது.

காதல் எனும் பெயரில் முஸ்லிமல்லாதவருடன் கைகோர்ப் பதோ கூடு விட்டு கூடு பாய்வதோ அனுமதிக்காது. ஒரு முஸ்லிமான ஆண் இன்னுமொரு முஸ்லிமான பெண்ணை மணமுடிப்பதையே ஏற்றுக் கொள்கிறது. இஸ்லாத்தில் இருந்து கொண்டு அதன் அடிப்படையை தகர்ப்பதை அனு மதிக்கவில்லை.

இணைவைக்கும் பெண்களை அவர்கள் ஈமான்கொள்ளும்வரைமணமுடிக்காதீர்கள்....

இணைவைக்கும் ஆண்களை அவர்கள் ஈமான் கொள் ளும் வரை (உங்கள் பெண்களுக்கு) மணமுடித்து வைக்காதீர்கள்.... அவர்கள் நரகத்தின் பால் அழைக்கின்றனர். ஆனால், அல்லாஹ்வோ அவனது நாட் டப்படி மன்னிப்பின்பாலும்சுவர்க்கத்தின் பாலும் அழைக் கிறான். (2: 221)

ஏக இறைவனை ஏற்றுக் கொண்டவர்களும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் சமமாக மாட்டார்கள். எனவே காதலின் பெயரில் இரு கொள்கை அல்லது இரு மதத்தை யுடையவர்கள் ஒன்று சேர்வதை இஸ்லாம் அனுமதிக்க வில்லை. இஸ்லாம் வலது சாரியுடைய மார்க்கமல்ல.

எனவே இஸ்லாம் கூறும் ஆண் பெண் உறவு பற்றிய விளக்கம் மிகத் தெளிவானது, புனித மானது. அதனைத் தாண்டிப் போகும் செயலை இஸ்லாம் தடை செய்கிறது.